

நெல்லை மாவட்டம் மேல இலந்தை குளத்தில் இருசக்கர வாகன விபத்து ஏற்பட்டு ராபின்சன் (வயது 23) மூளை சாவு அடைந்தார்.அவர்களின் உறவினர்கள் அன்னாரது உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்துள்ளனர்.நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது உடலுக்கு அரசு சார்பில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் ஆகியோர் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.நிகழ்வில் ராபர்ட் புரூஸ் எம்.பி.நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.ரூபி மனோகரன் எம்.எல்.ஏ. மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ்,அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரேவதி பாலன் உள்பட பலர் உள்ளனர்.

### முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவில்

# கல்லூரி மாணவியர்களுக்கான ஹாக்கிப் போட்டி!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை.அக்.10–

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவில் கல்லூரி மாணவியர்களுக்கான ஹாக்கி விளையாட்டுப் போட்டியினை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு பந்தை அடித்து விளையாடி துவக்கி வைத்தார்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் (08.10.2025) முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவில் கல்லூரி மாணவியர்களுக்கான ஹாக்கி விளையாட்டுப் போட்டியினை சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ்,நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் கே. ஆர்.ராஜு,மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நான்கு ஆண்டிற்கு மேல் விளையாட்டுத் துறையில் மிகவும் பெரிய எழுச்சி பெற்றுள்ளது. குறிப்பாக துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறை அமைச்சராக பெறுப்பேற்ற நாளிலிருந்து விளையாட்டுத்துறை மிகவும் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்து விளையாட்டுத் துறையில் இந்திய அளவில்,ஆசிய அளவில், உலக அளவில்,ஒலிம்பிக் அளவில் வெற்றி பெற்றவர்களை எடுத்து கொண்டால் தமிழ்நாட்டை சேர்ந்த வீரர்,வீராங்கனைகள் முன்னிலையில் இருப்பார்கள்.அந்த அளவிற்கு விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், அரசு அலுவலர்கள்,மாற்றுத் திறனாளிகள்,பொதுமக்கள் ஆகியோர்களுக்கு தனித்தனியாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.இந்த ஆண்டில் மட்டும் விளையாட்டுப் போட்டிகளில் 6.7 இலட்சம் நபர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.மாவட்ட அளவில், மண்டல அளவில் நடைபெற்று முடிவற்று தற்போறு மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது.

கடந்த வாரம் 3ஆம் தேதி தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளி மாணவியர்களுக்கான ஹாக்கி விளையாட்டுப் போட்டி தொடங்கப் பட்டு சிறப்பாக நடைபெற்று முடிவடைந்தது.

அதில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசாக ரூ.75,000ம்,2 வது பரிசாக ரூ.50,000ம்,3 வது பரிசாக ரூ.25,000ம் வழங்கப்பட்டது. அதேப்போன்று இன்று கல்லூரி மாணவியர் களுக்கான மாநில அளவில் ஹாக்கி விளையாட்டுப் போட்டிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.இப்போட்டி வருகின்ற 12 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.இப்போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசாக ரூ.75,000 ம்,2 ம் பரிசாக ரூ.50,000ம், 3 ம் பரிசாக ரூ.25,000ம் வழங்கப்படவுள்ளது. துணை முதலமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு மைதானத்தில் ரூ.2.40 கோடி மதிப்பில் ஹாக்கி மைதானத்தை மிகவும் சிறப்பாக ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள். மாணவியர்களிடம் ஹாக்கி மைதானத்தை பற்றி கேட்டப்போது மைதானம் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது என மாணவியர்கள் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில் சிறப்பான ஹாக்கிமைதானம் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு மைதானத்தில் அமைந்தது மிகவும் பெருமையாக கருதப்படுகிறது.இம்மைதானத்தை ஏற்படுத்தி கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கும்,துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

முன்னதாக பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் ஹாக்கி விளையாட்டு போட்டியினை ஊக்குவிப்பதற்காக ஹாக்கி மட்டையுடன் மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், துவக்கி வைத்தார்.இப்பேரணி பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் இருந்து அண்ணா விளையாட்டு அரங்கம் வரை சென்றடைந்தது.இப்பேரணியில் 1000 த்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன் கான்,மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர்,கனகராஜ்,மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் கிருஷ்ணசக்கரவர்த்தி தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன் உட்பட அரசு அலுவலர்கள்,விளையாட்டு வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளால் ஈர்க்கப்பட்டு

# நெல்லை மேற்கு மாநகரத்தில் மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில்!

நெல்லை.அக்.10-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் அரசின் சாதனைகளால் ஈர்க்கப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் அரசு தொடர்ந்து பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகளை செயல்படுத்தி வருகிறது.அதனை கருத்தில் கொண்டு மாற்று கட்சியினர், இளைஞர்கள் கழகத்தில் தொடர்ந்து இணைந்து வருகின்றனர்.

அதன்படி எண்ணற்ற திட்டங்களால் ஈர்க்கப்பட்டு நெல்லை மேற்கு மாநகர அலுவலகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பத்மராஜ்,பெருமாள்,முத்து ஆகியோர் தலைமையில் மாநகர மேற்கு பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.கழகத்தில் இணைந்த இளைஞர்களுக்கு உறுப்பினர் படிவம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் நெல்லை பேட்டை மேற்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் கோபி, நெல்லை பேட்டை பகுதி அவைத்தலைவர் சுப்பையா,27வது வட்ட கழக செயலாளர் கேபிள் குமரேசன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான்,மாநகர விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஷெட்டி, மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் தளபதி ஆறுமுகம், மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் மகாராஜன்,மாநகர இலக்கிய அணி துணை அமைப்பாளர் வைரமணி,மாநகர அயலக அணி அமைப்பாளர் செந்தில்குமார்,14வது வார்டு நாவல்டி நம்பி, தலைமை கழக பேச்சாளர் மைக் மணி,முன்னாள் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சிவக்குமார், 27வது வார்டு வேல் ஆறுமுகம்,25வது வார்டு இசக்கி அய்யப்பன்,22வது வார்டு சபரிமலை வாசன்,மாநகர அயலக அணி துணை அமைப்பாளர் அந்தோணி ராஜ்,

இலக்கிய அணி துணை அமைப்பாளர் ராமசந்திரன்,பொறியாளர் அணி செல்வ பெருமாள்,சுத்தமல்லி ராஜ்குமார்,மானூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கொண்டாநகரம் கார்த்திக்,வர்த்தக அணி துணை அமைப்பாளர் பேராத்து செல்வம், பாலகிருஷ்ணன், பால்ராஜ், கிருஷ்ண குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெல்லை மேற்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் வினோத்குமார் செய்திருந்தார்.



நெல்லை கிழக்கு மாவட்டம், இராதாபுரம் கிழக்கு,மேற்கு ஒன்றிய பொது உறுப்பினர் கூட்டம், சமுகரெங்கபுரம் கே.பி.சி திருமணமஹாலில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் இராமையா தலைமையில், இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி ஆகியோர் முன்னிலையில் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.நிகழ்வில் இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், பரமசிவ ஐயப்பன், கனகராஜ், ஜான்ரவீந்தர், அலெக்ஸ் அப்பாவு, முருகன், கமலாநேரு, எஸ்.என். முருகன், மீனவரணி சகாய பிரபு, சரவணன், ஆதிபரமேஸ்வரன் உள்பட அணி நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# செல்வத்துள், "செல்வம்"



தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தையில் நிறைந்த, கழகக் கருவூலம், முரசொலியின் ஆசிரியர் ஐயா செல்வம் அவர்களின் முதலாமாண்டு நினைவு நாள் இன்று (10.10.2025).

தலைவர் கலைஞர் எனும் ஆலின் அரவணைப்பில் ஆயிரமாயிரம் தம்பியர் பல்வேறு துறைகளில் தங்களை சீர்படுத்திக் கொண்டு சிறப்புற்றிருந்தார்கள் என்பது வரலாறு.

அவரின் எழுத்து, பேச்சு, இலக்கியம், நிர்வாகத் திறன், பத்திரிகை ஆளுமை, அரசியல் அணுகுமுறை, நயத்தகு நாகரிகம் என எத்தனையோ பண்புகளை தலைவர் கலைஞர் அவர்கள் கையாண்ட விதங்களை உடனிருந்து உற்றுநோக்கி , உள்வாங்கி, உலைகளத்தில் வடிக்கப்பட்ட கொள்கை வாளாக, தன்னை மெருகேற்றிக்கொண்டவர் மறைந்த ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் அன்பில் நிறைந்து, தலைவர் கலைஞரின் மனதில் இடம் பெற்று இயக்கத்தின் கேடயமாக விளங்கியவர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

திமுகவில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு, பல இன்னல்களை ஏற்று, தியாகங்கள் பலபுரிந்த பலரின் ஏற்றத்திற்கு ஏணியாகத் திகழ்ந்தவர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

திறமையாளர்களை அடையாளம் கண்டு, அவர்களின் அரசியல் அரங்கேற்றத்திற்கு அச்சாணியாகப் பின் நின்றவர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

தலைவர் கலைஞர் எனும் தாய்ப்பறவையின் செட்டைகளின் கதகதப்பில் வளர்ந்து, சட்டம் பயின்று, எழுத்தாளராக, அரசியல் விமர்சகர் மற்றும் கட்டுரையாளராக, பத்திரிகை ஆசிரியராக, திரைப்படத் தயாரிப்பாளராக பன்முக ஆளுமை கொண்டவர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

தலைவர் கலைஞர் அவர்களின் வசனத்தில் வெளிவந்த வண்டிக்காரன்மகன், பாலைவனரோஜாக்கள், புயல்பாடும் பாட்டு, பாசப்பறவைகள் போன்ற சமூக மாற்றங்களை வலியுறுத்தி வெற்றி கண்ட பல திரைப் படங்களைத் தயாரித்த திறமைமிக்கவர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

மாணவப்பருவத்தில் அண்ணாவின் அறிவில் வியந்து, தான் மட்டுமின்றி, தன்னைப் போன்று திராவிட உணர்வு மிகுந்திருந்த அந்நாள் மாணவர்கள் பலரை அண்ணாவிற்கு அறிமுகம் செய்து, பின்நாளில் அவர்களின் பெருவாழ்விற்கு காரணமான திருவுருவம் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

திராவிட இயக்கத் தலைவர் சர் ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் ஏமன் நாட்டிற்கு பயணம் செய்து பெரு விபத்தொன்றில் மறைந்த பெருந்துயரம் அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்களின் உள்ளத்தில் தாங்க வொண்ணா வேதனையைத் தந்தது.

அண்ணாவும், கலைஞரும் தங்களின் இதய அஞ்சலியை மறைந்த பெருமகனுக்கு கண்ணீரை எழுத்தில் வடித்தனர்.

தலைவர் கலைஞர் அவர்களோ தனது அக்காளின் இளைய மகனுக்கு ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்களின் நினைவாக " பன்னீர்செல்வம் " என்று பெயரிட்டார். தனது வசனத்தில் உருவான பராசக்தியில்,

" பூமாலை நீ ஏன் புழுதி மண்மேலே வீணே, வந்தேன் தவழ்ந்தாய் ராஜா, பாராயோ என் பன்னீர்செல்வமே! " எனும் பாடலிலும், வாய்ப்பு காணும் இடமெல்லாம் திராவிடத்தை செதுக்கிய சிற்பிகளை சிறப்பித்து வந்தார்.

**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
கழகக் கொள்கை பரப்பு துணைச் செயலாளர்



இயக்கத்தின் எதிரிகள் எக்காளமிட்டு கணைகளை வீசியபோதெல்லாம் அவற்றை எதிர்கொண்டு கூர் மழுங்கச் செய்து கேடயமாக உயர்ந்து நின்ற முரசொலியில் தலைவர் கலைஞர், மாமேதை மாறன் இவர்களோடு முரசொலியின் ஆசிரியராகப் பணியாற்றி முரசொலியில் கட்டுரை, தலையங்கம், கேலிச்சித்திரங்கள் தீட்டி கழக வளர்ச்சிக்கு மிகப் பெரும் தொண்டாற்றியவர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

தலைவர் கலைஞர் அவர்களைத் தொடர்ந்து முரசொலி ஆசிரியராகத் திகழ்ந்த மாறன் அவர்கள் ஒன்றிய அமைச்சராகப் பொறுப்பேற்றதோடு நாடாளுமன்றப் பணிகளிலும் நேரமின்றி உழைத்த அவரின் பணிச்சுமையைப் போக்க, தலைவர் கலைஞர் அவர்களால் முரசொலியின் ஆசிரியராகப் பொறுப்பிற்கு வந்தவர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

முரசொலியின் ஆரம்ப காலம் தொட்டு ஆசிரியராகவும் , நிர்வாகப் பொறுப்பில் இருந்தோரெல்லாம் ஆளுங்கட்சியின் அடக்குமுறைகளுக்கு அவ்வப்போது ஆளாகியே வந்தனர்.

இந்தித்திணிப்பை எதிர்த்து நின்ற மொழிப்போரில் தலையங்கம் தீட்டி மாணவர்கள் கிளர்ச்சியை தூண்டினார் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அந்நாளில் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டதோடு, அதை முரசொலியில் வெளியிட்டார் என்பதற்காக அதன் பொறுப்பாசிரியர் மாமேதை மாறன் அவர்களும் தண்டிக்கப்பட்ட வரலாற்றைத் தொடர்ந்து முரசொலிக்கு ஏற்பட்ட இன்னல்கள் எண்ணிலடங்காதவை.

தலைவர் கலைஞரின் கைவண்ணத்தில் கலைத் துறையில் ஈட்டிய பொருளெல்லாம், முரசொலியின் காகிதங்களில் கரைந்தது.

ஆனால் அவற்றை தாளாக தவழவிடாமல் திராவிட வாளாக, வேலாகத் தவழவிட்டு, தருக்கர்களின் எதிர் வீச்சை தடுக்கும் கேடயமாக முரசொலியை லாவகமாக கையாண்ட இதழியல் விற்பன்னர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

1991:ல் ராஜீவ்காந்தி அவர்களின் கொடூர மரணத்தை சாதகமாகக் கொண்டு, சதிகாரர்களின் வெறியாட்டத்தில் முற்றிலும் தீக்கிரையாகி சிதைக்கப்பட்டது முரசொலி அச்சுக்கூடம்.

நிலைகுலைந்து போன நிர்வாகிகள் நடுவில் , இரண்டாம் உலகப் போரின் போது நேசநாட்டுப் படையின் தலைவர் வின்ஸ்டன் சர்ச்சில் , "LONDON WILL TAKE IT" என்று முழங்கியது போல், MURASOLI WILL TAKE IT என்று தலைப்பிட்டு, பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தி, கழகத்தொண்டனின் வாட்டம் போக்கி எல்லாத் துயரையும் எதிர்கொள்ளும் நெஞ்சுரம் மிகுந்தது தி.மு.க. என்பதை பாருக்கு உணர்த்திய பத்திரிக்கையாளர் மறைந்த ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

ஜெயலலிதா ஆட்சியில் ஜனநாயகத்தை காலில் போட்டு மிதித்து, பத்திரிக்கைகளின் குரல்வளை நெரிக்கப்பட்டு, பேரவையில் நிகழ்ந்த செய்தியை வெளியிட்ட குற்றத்திற்காய் வருத்தம் தெரிவித்தப்பின்னும் முரசொலி செல்வம் அவர்களை பேரவைத் தலைவர் கூண்டிலேற்றினார்.

ஆசிரியர் செல்வம் அவர்களின் அஞ்சாமை, துணிவு, பத்திரிக்கா தர்மத்தை தூக்கிப் பிடித்த பண்பு குன்றிலேறி அவருக்கு பெரும்புகழை அன்று பதிவு செய்தது.

தலைவர் கலைஞர் அவர்களும் கூண்டில் முரசொலி செல்வம் அவர்களை அச்சம் தவிர்த்த அரிமாபோல் கண்டு, குதூகலம் கொண்டார்.

திராவிட இயக்கத்தின் அறிவுச் செல்வம்!

கருத்துப்பேழை! வரலாற்றுச் சுரங்கம்!

சிலந்தி எனும் பேரில் அறிசார் ஆதார வலைகள் பின்னி, எதிரிகளை சக்கர வியூகத்தில் சிக்கவைத்து, கழகத்தோழர்களின் கையேடாக, இளம் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் நாளும் பின்பற்றும் வழிகாட்டியாக முரசொலியை முதன்மைப் படுத்திய ஆற்றல் செல்வம் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்!

இப்படி அண்ணாவின் அன்பின் "சொல்வா" வாக, தலைவர் கலைஞரின் இதயம் நிறைந்த செல்வமாகத் திகழ்ந்து, தி.மு.கழகத்தின் நீண்ட நெடிய பயணத்தில் ஆட்சியிலோ, கட்சி அதிகாரத்திலோ தன்னை திணித்துக் கொள்ளாமல், தலைவர் கலைஞர், தி.மு.க. எனும் இரு பெரும் ஆளுமைகளுக்கு துணைநின்று தினம் தினம் முரசொலியில் தனது திறமைமிக்க எழுத்துக்கள் மூலம் அவதரித்து, எதிரிகளுக்கு எரிமலையாய், இயக்கத்தவர்க்கு கேடயமாய், கையேடாய், காலப்பெட்டகமாய், கருத்து கருவூலமாய்,, வரலாற்றுச் சுரங்கமாய் முரசொலியை வடிவமைத்தவர் ஐயா முரசொலி செல்வம் அவர்கள்.

இன்று அவரின் முதலாமாண்டு நினைவேந்தல்.

அவர் நம்மைவிட்டு, கோபாலபுரக் குடும்பத்தை கதறவிட்டு, எழுத்துலகைவிட்டு, இயக்கத்தளகர்த்தர்களை தவிக்கவிட்டு, அவரால் ஏற்றம் பெற்ற பலரை வாட்டமுறச் செய்து, காலத்தின் கரங்களில் கலந்துபோனார்.

முரசொலி குடும்ப பத்திரிக்கையா? என்றதொரு கேள்விக்கு, " கலைஞர் குடும்பமே உழைத்த பத்திரிகை " என்று பதிலுரைத்த தலைவர் கலைஞர் குடும்பத்தின் " குட்டி அத்தான் "

மாமேதை மாறன் குடும்பத்தினருக்கு " குட்டி அப்பா " எனப் பாசப்பறவையாய்த் திகழ்ந்த பண்பாளர் ஓய்வு கொண்டார்.

அதேவேளை ஓய்வின்றி உழைக்கும் நமது திராவிடப் பேரரசர் தளபதியவர்களின் உள்ளத்திலல்லவோ உலைகளத்தின் கொதிநெருப்பைக் கொட்டியது போல் பிரிந்து சென்றார்.

தலைவர் கலைஞரின் மறைவிற்குப் பிறகு தனக்கு வழிகாட்டியாக, தந்தை நிலையில் நின்று வழிநடத்திய வாஞ்சைமிக்க துணைவனாக, எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் துன்பமேகங்கள் சூழ்ந்திடும் வேளையில் தலைவர் தளபதியவர்கள் சாய்ந்து கொள்ளும் தோளாக, பெருந்தூணாக நின்ற ஐயா முரசொலி செல்வம் அவர்களின் திடீர் மறைவால் திடங்கொண்ட தளபதியவர்களின் உள்ளம் இன்றும் கலங்கியே நிற்கிறது!

நம்மையெல்லாம் வழிநடத்திக் காத்திடும் தலைவரின் இதய ரணங்களுக்கு யாரால் மருந்திட முடியும்?

சுவரே சாய்ந்தால், சித்திரங்கள் சிதையாதோ?

எனவே இன்றைய நாளில் இயக்கத்தின் வெற்றிக்காக, தலைவர் கலைஞர் மற்றும் தளபதியவர்களின் அரசியல் மேன்மைக்காக, அணுப்பொழுதும் வீணாக்காமல் தொண்டாற்றிய ஐயா முரசொலி செல்வம் அவர்கள் போன்று நாம் சாய்ந்து கொள்ளும் தோளாகாவிட்டாலும், திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்களின் கரங்களிலிருந்து பாய்ந்து செல்லும் வேலாக, பகைக் கூட்டத்தை வெற்றி கொள்ளும் பகுத்தறிவு வாளாக துணைநிற்போமென உறுதியேற்போம்.

வெல்க திராவிடப் பேரரசர் தளபதியவர்கள்!

ஓங்குக தன்னலமற்ற, தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தையில் நிறைந்த ஐயா முரசொலி செல்வம் அவர்களின் பெரும்புகழ்!